# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF SUB COURT, USILAMPATTI.

| | |
|---|---|
| Miscellaneous case No: | : S.C No. 529 / 2019 |
| Preliminary Register | : |
| Sessions | : |
| Deposition of witness of | : P.W. 1 |
| Name | : நிஜாம்தீன். |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.11.2023.

\- - - - - - -

எதிரி ஆஜர்.

<u>முதல் விசாரணை:</u>

நான் உத்தப்பநாயக்கனூரில் குடியிருக்கிறேன். ஆஜர் எதிரியைத் தெரியும். கடந்த 2015 ஆம் ஆண்டு எதிரியின் மகள் சுனைதாபானுவை திருமணம் செய்துகொண்டேன். எங்களுக்குள் ஏற்பட்ட கருத்துவேறுபாடு காரணமாக அவர் தற்கொலை செய்துகொண்டார். இது விசயமாக ஆஜர் எதிரியால் புகார் செய்யப்பட்டு, என் மீதும், என் தாயார் மீதும் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, நான் சிறைச்சாலையில் இருந்துவந்தேன். சம்பவம் நடந்த 6 மாதம் கழித்து நான் இரவு 08.30 மணி சுமாருக்கு உத்தப்பநாயக்கனூர் பஸ் ஸ்டாண்டில் நானும் என் நண்பர் நீதி, கூலு,

அம்சுபாண்டி ஆகியோர்களுடன் பேசிக்கொண்டிருந்தபோது, ஆஜர் எதிரி இடுப்பில் மறைத்துவைத்திருந்த கத்தியை எடுத்து என் வலது விலாவிலும், வலது தோள்பட்டை, வலது உள்ளங்கையிலும், வலதுபக்க முதுகுப் பக்கவாட்டிலும் மாறி மாறி குத்தினார். அதோடு வலது முழங்காலிலும் குத்தி ரத்தக் காயம் ஏற்படுத்தினார். நான் உயிருக்குப் பயந்து தப்பித்து ஓடும்போது எதிரி என்னை விரட்டிப்பிடித்து மீண்டும் குத்தியதில் என் இடது முழங்காலில் பட்டது. நான் மயங்கி கீழே விழுந்துவிட்டேன். அப்போது அருகிலிருந்தவர்கள் அந்த வழி சென்ற ஆட்டோவில் உசிலம்பட்டி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்குச் சேர்த்தார்கள். அங்கு போலிசார் என்னை விசாரித்து புகார் வாக்குமூலம் வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் போலிசாரிடம் கொடுத்ததுதான். அது அ.சா.ஆ.1. எதிரி என்னை குத்தப் பயன்படுத்திய கத்தியைப் பார்த்தால் என்னால் அடையாளம் காட்டமுடியும். என்னிடம் காட்டப்படும் கத்திதான் எதிரி என்னைப் பலமுறை குத்தப் பயன்படுத்தியது. மேற்படி கத்தி சா.பொ.1 ஆகும். அதன்பிறகு போலிசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை - இல்லை.

ஒப்பம் / திரு. P.S. ரஸ்கின் ராஜ், 03.11.23.
சார்பு நீதிபதி, உசிலம்பட்டி.

/ உண்மை நகல் /

சார்பு நீதிபதி, உசிலம்பட்டி.